பக்கங்கள்:-20

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | மாசி 07 | செவ்வாய்க்கிழமை | 20.02.2024 | அதிர்வு 203

## புலிகளின் தங்கத்தைத் தேடி தர்மபுரத்தில் அகழ்வுப் பணி!

கிளிநொச்சி – தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்டபட்ட விசுவமடு – குமாரசாமிபுரம் பகுதியில் அமைந்துள்ள தனியாருக்குச் சொந்தமான காணி ஒன்றில் விடுதலைப் புலிகள் அமைப்பினால் யுத்த காலப்பகுதியில் தங்க ஆபரணங்கள் 06



# தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண பேச்சு முன்னெடுப்பு என்கின்றார் ரணில்

## தொடர்ந்து மலையக மக்கள், முஸ்லிம்களின் விடயங்களைத் தீர்ப்பதற்கு நடவடிக்கையாம்

கொழும்பு, பெப்ரவரி 20

“வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பேச்சுக்களை முன்னெடுத்துள்ளோம். அதன் பின்னர் மலையகத் தமிழ் மக்களதும், முஸ்லிம் மக்களதும் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும்.”

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார். 06

## ரயிலுடன் மோதி இழுபட்ட ஸ்கூட்டி தாயும், இரு சிறு பிள்ளைகளும் பலி!

### ஆராச்சிக்கட்டுவவில் நேற்று நடந்த சோகம்





(ரஸீன் ரஸ்மின்)

ஆராச்சிக்கட்டுவ-ஆனவிழுந்தான் உப ரயில் நிலையத்திற்கு உட்பட்ட மய்யாவ பகுதியில் ஸ்கூட்டி 07




நாட்டின் பொருளாதார நிலைமை மோசமானகட்டத்தைஎட்டி, வங்குறோத்து நிலையை அடைந்தமைக்கான காரணம் தொடர்பில் நிதியமைச்சின் செயலாளர் கே.எம்.மஹிந்த சிறிவர்தனமனம்திறந்துபேசியிருக்கின்றார்.

சர்வதேச வர்த்தக சம்மேளனத்தின் இலங்கைக் கிளையின் ஏற்பாட்டில் கொழும்பில் இடம்பெற்ற ஒருநாள் செயலமர்வில் கலந்துகொண்டு 06



# ஐக்கிய நாடுகளின் உணவு, விவசாய அமைப்பின் பணிப்பாளர்நாயகத்துடன் ஜனாதிபதி சந்திப்பு!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி கூ தொங்யுவுக்கும் இடையிலான சந்திப்பொன்று ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

பொருளாதார சவால்களுக்கு முகங்கொடுத்து இலங்கை மக்களுக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டத்தை பணிப்பாளர் நாயகம் பாராட்டினார்.

அத்துடன், புதிய சீர்திருத்தங்களினூடாக நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கான ஜனாதிபதியின் அர்ப்பணிப்புக்கும் அவர் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

இந்த நெருக்கடியான சமயத்தில் இலங்கை அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் உணவு மற்றும் விவசாய அமைப்பு தொடர்ந்து பூரண ஆதரவை வழங்கும் என்றும் பணிப்பாளர் நாயகம் உறுதியளித்தார்.

இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் பணிப்பாளர் நாயகத்திற்கு விளக்கமளிக்கப்பட்டது.

இலங்கையின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதில் விவசாயம் முக்கிய துறையாக இருக்கும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அத்துடன், விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு உணவு மற்றும் விவசாய அமைப்பின் பங்களிப்பையும் ஆதரவையும் எதிர்பார்கின்றோம் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் சர்வதேச உறவுகள் தொடர்பான பணிப்பாளர் தினுக் கொழும்பகே ஆகியோரும் இணைந்து கொண்டனர்.









# மாணவர் நாடாளுமன்றத்தின் உறுப்பினர்கள் அமைச்சரவையில் ஜனாதிபதியுடன் சந்திப்பு

கடவத்த மகாமாயா மகளிர் கல்லூரியின் மாணவர் நாடாளுமன்ற முதல் அமர்வு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் சிநேகபூர்வ சந்திப்பொன்றை மேற்கொள்ளும் வாய்ப்பு மாணவிகளுக்குக் கிடைத்தது.

ஜனாதிபதி அலுவலகத்தில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்ற சந்தர்ப்பத்தில் மாணவிகளை அங்கு அழைத்துச் சென்ற ஜனாதிபதி, அமைச்சரவை என்றால் என்ன, அதன் கட்டமைப்பு மற்றும் செயல்பாடுகள் குறித்து அவர்களுக்கு விளக்கினார்.

நாட்டின் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படுகின்ற பிரதான இடமான அமைச்சரவைக்கு தலைமை தாங்கும் ஜனாதிபதியுடன் முதன்முறையாக கலந்துரையாடும் சந்தர்ப்பம் பாடசாலை மாணவிகளுக்கு கிடைத்தமை விசேட அம்சமாகும்.

மாணவர் நாடாளுமன்றத்தில் அமைச்சுப் பதவிகளை வகிக்கும் மாணவிகளுக்கு அமைச்சர்களின் பொறுப்புகள், பணிகள் மற்றும் அமைச்சரவையின் பொறுப்புகள் குறித்தும் ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

நாட்டின் எதிர்கால சந்ததியினர் அரச நிர்வாகக் கட்டமைப்பு தொடர்பில் நன்கு அறிந்திருக்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி எடுத்துரைத்தார். இந்த சந்திப்பில் அமைச்சரவை கூட்டத்தில் பங்கேற்ற அமைச்சர்களும் உடனிருந்தனர்.

தனது பாடசாலை மாணவிகளுக்கு கிடைத்த இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க வாய்ப்பு குறித்து கடவத்த மகாமாயா மகளிர் கல்லூரி அதிபர் டபிள்யூ.ஆர்.பிரியதர்ஷினி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு நன்றி தெரிவித்தார்.











# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக வெளியிடப்படுகின்ற ஜனாதிபதி செயலக அறிக்கைகள் செல்லுபடியற்றவை

## உண்மையை அம்பலப்படுத்துகின்றார் பேராசிரியர் பீரிஸ்

ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் திகதி தொடர்பில் ஜனாதிபதி தீர்மானிக்க முடியாது. தேசியத் தேர்தல்கள் தொடர்பில் ஜனாதிபதி செயலகம் வெளியிடும் அறிக்கைகள் வெறும் கடதாசி மாத்திரமே தவிர, அதற்கு எவ்வித செல்லுப்படி தன்மையும் கிடையாது என சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள சுதந்திர மக்கள் சபையின் காரியாலயத்தில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசமைப்பின் பிரகாரம் இந்த ஆண்டு நடத்தப்பட வேண்டிய ஜனாதிபதி தேர்தலைப் பிற்போடுவதற்கு அரசாங்கம் முன்னெடுத்த சகல முயற்சிகளும் தோல்வியடைந்துள்ள நிலையில் நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இரத்து செய்யும் இறுதியான முயற்சியை அரசாங்கம் கையில் எடுத்துள்ளது.

தேர்தலை நடத்தாமல் மேலும் ஓர் ஆண்டு காலம் பதவியில் இருக்க அரசாங்கம் முயற்சிக்கிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இந்த அரசாங்கத்தின் சாபத்தை முடிவுக்குக் கொண்டு வருவதா அல்லது காலத்தை நீடித்து சாபத்தைத் தொடர்ந்து அனுபவிப்பதா என்பதை நாட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டும்.

ஜனாதிபதி தேர்தலை நடத்தும் திகதி தொடர்பில் ஜனாதிபதி தீர்மானிக்க முடியாது. தேசியத் தேர்தல்கள் தொடர்பில்



ஜனாதிபதி செயலகம் வெளியிடும் அறிக்கைகள் வெறும் கடதாசி மாத்திரமே தவிர, அவற்றுக்கு எவ்வித செல்லுப்படி தன்மையும் கிடையாது.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு மட்டுமே உண்டு. ஜனாதிபதி தேர்தல் விவகாரத்தில் அரசமைப்பினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய தேர்தல்கள் ஆணைக்குழு செயற்பட வேண்டும்.

தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும்,அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு எதிர்வரும் வாரம் தேர்தல்கள் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கான நடவடிக்கைகள் வெளிப்படைத்தன்மையுடன் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தவுள்ளோம். - என்றார்.

# கல்வித்துறையை டிஜிட்டல் மயமாக்கும் முன்னோடித் திட்டம் மார்ச்சில் ஆரம்பம்

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தகவல்



கல்வித்துறையை டிஜிட்டல் மயமாக்குவதற்கான முன்னோடித் திட்டத்தை மார்ச் மாதம் ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் -

"2024 ஆம் ஆண்டிற்கான பாடசாலைப் பாடப்புத்தகங்கள் யாவும் விநியோகத்திற்காக அனுப்பப்பட்டுள்ளன. மார்ச் முதலாம் திகதியாகும் போது பாடசாலைகளில் விநியோகப் பணிகள் நிறைவு செய்யப்படும். இதற்காக 12,000 மில்லியன் ரூபா செலவிடப்படுகிறது.

அத்துடன், சீன அரசாங்கத்தின் அனுசரணையின் கீழ் பாடசாலை மாணவர்களின் சீருடைக்குத் தேவையான துணியில் 80 வீதம், அதாவது 05 பில்லியன் ரூபா பெறுமதியான சீருடைத்துணிகள் எமக்குக் கிடைத்துள்ளன. அவை விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

மேலும், இந்த ஆண்டுக்கான பாடசாலை கால அட்டவணை தற்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றது. இந்த ஆண்டு இறுதிக்குள், உயர்தரப் பரீட்சை திட்டமிட்டபடி நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் அடுத்த இரண்டு, மூன்று வாரங்களுக்குள் சுற்றறிக்கை மூலம் பாடசாலைகளுக்கு அறிவிக்கப்படும்.

மேலும், பாடசாலை செல்லாத பிள்ளைகள் குறித்து பல்வேறு தரப்பினரும் கருத்து தெரிவித்து வருகின்றனர். சுகாதார அமைச்சின் தரவுகளின்படி, குழந்தைகளின் பிறப்பு வீதம் குறைவதால் பாடசாலைக்குச் சேர்க்கப்படும் பிள்ளைகளின் எண்ணிக்கையும் குறைகிறது. இது 0.17 வீதம் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதில் 10 மாத கால தாமதம் ஏற்பட்டுள்ளது.ஆள்சேர்ப்பை நிறுத்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது . அடுத்த இரண்டு வாரங்களில் நீதிமன்ற தீர்ப்பு கிடைத்தால், ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப முடியும். 20,000 ஆசிரியர்களுக்கான வெற்றிடம் உள்ளதால் மாணவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், சேவையை விட்டுச் சென்ற மற்றும் வெளிநாடு சென்ற ஆசிரியர்கள் காரணமாக மாகாண மட்டத்தில் 13,500 வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் ஆள் சேர்ப்புத் தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்த விவகாரம் தொடர்பான நீதிமன்றத் தீர்ப்புக் கிடைத்தால், விரைவில் ஆள்சேர்ப்புகளை மேற்கொள்ள முடியும்.

இதுதவிர, ஆசிரியர் சேவை யாப்பின்படி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப வெற்றிடங்களுக்கு ஆள்சேர்ப்பது தொடர்பான பரீட்சை மார்ச் முதல் வாரத்தில் நடத்தப்பட்டு, மார்ச் இறுதிக்குள் ஆள்சேர்ப்பு நடைபெறும்.

அத்துடன் பாடசாலை மதிய உணவுக்காக 16 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.இது தொடர்பில் யு.எஸ்.எய்ட் நிறுவனத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

உயர்தரப் பரீட்சையை நிறைவு செய்த மாணவர்களுக்காக பெறுபேறுகள் வெளியாகும் வரை நாட்டிலுள்ள 300 நிலையங்களை உள்ளடக்கி பிற்பகல் 02.00 முதல் 04.30 வரை தொழிற்பயிற்சி மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டல் பாடநெறிகளை ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், கல்வித்துறையை டிஜிட்டல் மயமாக்கும் முன்னோடித் திட்டத்தை மார்ச் மாதத்தில் தொடங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதற்காக ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு மைக்ரோசொவ்ட் நிறுவனம் ஆதரவு அளிக்கிறது." - என்றார்.



# ஊர்காவற்றுறை - காரைநகர் பாதைச் சேவையில் பயணிகள் விடயத்தில் பாரபட்சமான செயற்பாடு!

## அருகே வந்த கூலித்தொழிலாளியை ஏற்றாமல் சென்றனராம்

ஊர்காவற்றுறை – காரைநகருக்கு இடையேயான பாதைச் சேவையில் பணியாற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபைப் பணியாளர்கள் பயணிகள் விடயத்தில் பாரபட்சத்துடன் நடக்கின்றனர் எனவும் இவ்விடயத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் பயணிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாதைச் சேவையின்போது தமக்கு தெரிந்த பயணிகள் யாராவது தொலைபேசி ஊடாக அழைப்பு எடுத்து தாம் வருகின்றோம் சில நிமிடங்கள் காத்திருங்கள் எனச் சொன்னால் ஏனைய பயணிகளை ஏற்றி வைத்துக்கொண்டு காத்திருந்து அவர்கள் வந்ததும் பாதையைச் செலுத்துகின்றனர்.

மேலும், தமக்கு வேண்டிய எவராவது, குறிப்பாக பெண்கள் தூரத்தே வந்தாலும் காத்திருந்து அவர்களை ஏற்றிச் செல்லும் பாதைப் பணியாளர்கள் ஏனையவர்கள் விடயத்தில் அவ்வாறு நடந்து கொள்வதில்லை என பயணிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

இவ்வாறு நேற்றுத் திங்கட்கிழமை காலை 8.45 மணிக்கு பாதை புறப்பட வேண்டிய நேரம் ஆகியும் கூட இரு பெண்களுக்காக காத்திருந்து ஏற்றி விட்டு, ஊர்காவற்றுறைக்குச் செல்ல வேண்டிய அப்பாவி கூலி தொழிலாளி ஒருவர் கை காட்டியவாறு அருகில் வந்தும் கூட அவரை ஏற்றாமல் சென்றனர். இவர்களின் செயலைப் பார்த்துக் கொண்டிருந்த தாங்கள் பணியாளர்களிடம் நியாமம் கேட்டபோதும் அவர்கள் சாக்குப்போக்குச் சொல்லிவிட்டுச் சென்றனர் எனப் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடம் பாதையில் மது போதையில் பணியாற்றிய ஒருவர் பயணி ஒருவரைத் தாக்கியதை அடுத்து அவர் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டார். இதையடுத்து சீராகச் செயற்பட்ட பாதைப் பணியாளர்கள் தற்போது மீண்டும் பயணிகள் விடயத்தில் பாரபட்சம் காட்டத் தொடங்கியிருக்கின்றனர் எனவும் பயணிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இவ்விடயத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபை உயரதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் பயணகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# யுக்திய சுற்றிவளைப்புகளில் 1,017 சந்தேகநபர்கள் கைது

யுக்திய சுற்றிவளைப்புகளில் மேலும் ஆயிரத்து 17 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் போதைப்பொருளுடன் தொடர்புடைய குற்றங்களுக்காக கைது செய்யப்பட்ட 903 சந்தேகநபர்களும் குற்றத்தடுப்பு பிரிவினால் பட்டியலிடப்பட்ட 114 சந்தேகநபர்களும் அடங்குகின்றனர் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

ஹெரோயின், ஐஸ், கஞ்சா, மாவா மாத்திரைகள் உள்ளிட்ட பல போதைப்பொருள்களும் இதன்போது கைப்பற்றப் பட்டுள்ளன.

போதைப்பொருளுடன் தொடர்புடைய குற்றங்களுக்காக கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில், பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பணியகம் மற்றும் பொலிஸ் விசேட பணியகத்தின் பட்டியலில் இருந்த 11 சந்தேகநபர்களும் புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பப்பட்ட 77 சந்தேகநபர்களும் தடுப்புக் காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட 5 சந்தேக நபர்களும் உள்ளடங்குகின்றனர் என பொலிஸார் தெரிவித் துள்ளனர்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கருத்துரைக்கையிலே அவர் இது பற்றி பிரஸ்தாபித்திருக்கின்றார்.

நாட்டின் உண்மையான பொருளாதார நிலைமை குறித்து இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு முன்னர் உண்மையை வெளிப்படுத்தி இருந்தால், பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபடவோ அல்லது பொருளாதார நெருக்கடியைக் குறைக்கவோ வாய்ப்பு இருந்திருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

“பொருளாதாரம் பற்றிய உண்மையான தகவல்கள் மக்களிடம் இருந்து மறைக்கப்பட்டமையால் நாட்டின் பொருளாதாரம் வங்குறோத்து நிலையை அடைந்தது.

“பொருளாதாரம் வீழ்ச்சியடையும் எனத் தெரிந்தும் எந்தவொரு நபரும் உண்மையைக் கூறவில்லை. இறுதியில் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது.

“பொருளாதாரத்தை வீழ்ச்சியடைய வைத்துவிட்டு மௌனம் காத்தார்கள். அவர்கள் நாட்டு மக்கள் மீது பாரிய அழுத்தத்தை ஏற்படுத்தினார்கள். இன்று மக்கள் மிகவும் கஷ்டப்பட்டு வாழ்கின்றனர்.

“நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினை இன்று,நேற்று ஏற்பட்டதல்ல, சுமார் 25 ஆண்டுகளுக்கு முன் நடந்தவற்றின் விளைவுகளைத்தான் இன்று நாம் அனுபவிக்கின்றோம்.

“வீழ்ச்சியடைந்த நாட்டின் பொருளாதாரம் மீண்டும் எழுச்சிபெறத் தொடங்கியுள்ளது. இது முற்றிலும் மகிழ்ச்சியான சூழ்நிலை அல்ல. இன்று நாம் எதிர்கொள்ளும் சவால் மிகப்பெரியது. அரசாங்கத்தின் வருமானத்தை விட செலவு அதிகம். முடிந்தவரை இதனை குறைக்க முயற்சிக்க வேண்டும்.

“வரி செலுத்தக்கூடியவர்கள் திட்டமிட்டபடி அரசாங்கத்திற்கு வரியை செலுத்தினால், தற்போதைய வரிச்சுமை வீதங்களைக் கூட மாற்ற முடியும்’ - என நிதியமைச்சின் செயலாளர் கே.எம். மஹிந்த சிறிவர்தன தெரிவித்துள்ளார்.

உண்மையை - கள யதார்த்தத்தை - சொல்லப் பலரும் விரும்புவதில்லை.

‘யதார்த்தவாதி வெகுஜன விரோதி’ என்பார்கள். உண்மையை - யதார்த்த நிலையை - எடுத்துரைக்கப் போனால் வாங்கிக் கட்ட வேண்டியிருக்கின்றது.

எனக்கும் அந்த அனுபவம் தாராளமாக உண்டு.

தமிழரசுக் கட்சியின் விடயத்திலும் அது நடந்தது. நடக்கின்றது.

உதாரணத்துக்கு பல சம்பவங்கள் உண்டு.

இப்போதும் கூட, பொறுப்பற்ற மாவை சேனாதிராஜாவின் தலைமைத்துவம் கட்சியைச் சந்தியில் நிறுத்தும் என்று ஓரிரு வருடங்களாகச் சொல்லி வந்தேன்.

இப்போதைய நிலைமை வழக்குக்குப் போய் சிக்கலை உண்டு பண்ணும் என்று நேரத்துடன் சுட்டிக் காட்டினேன்.

தேடிப்பிடித்து,நுகர்ந்துமுன்னுரைப்பது நம் ஊடகப் பணி. அதைச் செய்தமைக்காக என்னைச் சிலர் வைகின்றார்கள். வழக்கின் சூத்திரதாரியில் நானும் ஒருவன் என்றும் கூட சமூக ஊடகங்கள் சில எழுதியிருந்தன.

சிரிப்பாக இருந்தது.

இப்போதும் கூட ஒன்று சொல்ல விரும்புகிறேன்.

தமிழரசுக் கட்சியின் பிரமுகர்கள் எவ்வளவு காலம் சென்றாலும் வழக்காடிப் பார்க்கலாம் என்ற மிதப்பு நிலையில் கொழும்பில் சட்ட மேதைகளுடன் கலந்தாலோசனையில் இருக்கின்றார்கள் என அறிகிறேன்.

நல்லது. நடக்கட்டும்.

நீதிமன்றம் உத்தரவிட்டால், மூலக் கிளையில் தொடங்கி, தொகுதிக் கிளை, மாவட்டக் கிளை எல்லாம் ஆரம்பத்தில் இருந்து அமைத்து, கூட்டத்தை நடத்துவோம் என்று அவர்கள் கூறுகின்றனர் எனவும் அறிந்தேன்.

நீதிமன்ற உத்தரவுக்குப் பின்னர், அதன் அடிப்படையில் கிளைக் கூட்டங்களை ஆரம்பத்தில் இருந்து நடத்துவது சின்ன விவகாரம் அல்ல. உதாரணத்துக்கு ஒன்று.

காங்கேசன்துறைத் தொகுதிக் கிளையை அதன் தலைவரும் கட்சியின் தலைவருமான மாவை சேனாதி ராஜா நடத்தி இருந்தார்.

ஏழாம் வட்டார கிளையில் தலைவரான ஹரிகரன் மீது அவருக்குக் காய்ச்சல். அதனால் கூட்டத்துக்கு ஹரிஹரனை அவர் அழைக்கவில்லை. மாறாக ஏழாம் வட்டாரப் பிரதிநிதியாக தந்தை செல்வாவின் பேரன் இளங்கோவை தம்பாட்டில் நியமித்து, அவர் கூட்டத்தை நடத்தி இருந்தார். அதுபோல தொகுதிக் கிளைச் செயலாளர் சுகிர்தனை அவர் கூட்டத்துக்கு அழைக்கவே இல்லை.

நீதிமன்ற உத்தரவின் பின்னர் இத்தகைய மூலக்கிளை, தொகுதிக் கிளை, மாவட்டக் கிளைக் கூட்டங்களை வழமையாக மாவை சேனாதிராஜா கூட்டுகின்ற பாணியில் கூட்டுவதற்குப் புறப்பட்டால் ஒவ்வொரு கிளைக் கூட்டமும் நீதிமன்றத்தில் போய் நிற்கும். அப்போது கட்சியின் தேசிய மாநாட்டை நடத்தி முடிப்பது காலம் செல்லும். சில சமயங்களில் நீதிமன்றப் பிரதிநிதியை வைத்துக் கூட்டங்களை நடத்த வேண்டி வந்தாலும் வரும்.

சமூகமாகப் பிரச்சனையைத் தீர்ப்பது தான் தலைமைத்துவம் விரைந்து சிறீதரனின் கைகளுக்கு கிட்டுவதற்கான சுலபமான வழி என்பது என் கருத்து. கவனத்தில் எடுப்பதும் எடுக்காமல் விடுவதும் அவரவர் சுதந்திரம்..!

## புலிகளின் தங்கத்தைச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புதைக்கப்பட்டுள்ளன எனக் கிடைத்த தகவலை அடுத்து நேற்றைய தினம் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு பணிகள் இன்றைய தினமும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழர்களின் பிரச்சினைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியின் கீழ் தோட்டத் தொழிலாளர்களுக்காக 10 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் “பாரத் - லங்கா” வீடமைப்புத் திட்டத்தின் நான்காம் கட்டம் ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்து நேற்று ஒன்லைன் மூலம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

“வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பேச்சுக்களை முன்னெடுத்துள்ளோம். அதன்பின்னர் மலையக தமிழ் மக்களதும், முஸ்லிம் மக்களதும் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். இந்தப் பிரச்சினைகளைத்தீர்த்து, இந்த நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தி, முன்நோக்கிப் பயணிக்க வேண்டும். இந்தப் பயணத்திற்கு நாம் தயாராக வேண்டும். நீண்ட காலமாக நாம் துன்பங்களை எதிர் கொண்டோம். எனினும், இன்று வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டு வருகிறோம். இந்த வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டு, பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

உணவு இல்லாத, எரிபொருள் இல்லாத நாட்டையே நான் அன்று பொறுப்பேற்றுக் கொண்டேன். இன்று உணவு, எரிபொருள் ஆகியன தடையின்றி கிடைக்கின்றன. பொருளாதாரத்தை மேம்படுத்தி, முன்நோக்கிச் செல்லும் போதும் பிரச்சினைகள் எழும். வரி அதிகரிக்கப்பட்டதுடன் தொடர்புள்ள பிரச்சினை இருக்கிறது. எனினும், இந்தப் பிரச்சினைகள் நீண்ட காலம் நீடிக்காது. சிறிது காலம் செல்லும் போது அந்த வரிச்சுமை குறையும்.

நாடு நெருக்கடியை எதிர்கொண்ட போது இந்தியாவினால் வழங்கப்பட்ட உதவிகளுடன் முன்நோக்கிப் பயணிக்க முடிந்தது. இந்த உதவிகள் கிடைத்திருக்காவிட்டால், எம்மால் முன்நோக்கிப் பயணித்திருக்க முடியாது. எனவே, நாம் இந்தியாவுடனான பொருளாதார உறவுகளை மேலும் வலுப்படுத்திக்கொள்ள நடவடிக்கை எடுத்து வருகிறோம். அனைத்து நாடுகளும் தமது எல்லைகளுக்குள் பொருளாதாரத்தையும், சமூகத்தையும் மேம்படுத்திக் கொள்ளவே முயற்சித்தன. விசேடமாக இந்தியாவின் பொருளாதாரம் வேகமாக வளர்ந்து வரும் நிலையில், நாமும் இதிலிருந்து பயன் பெற வேண்டும்.

இந்தியப் பிரதமர் மோடியை சந்தித்த போது, இதுகுறித்து இணக்கப்பாட்டிற்கு வந்து, இதனை மையப்படுத்தி பணியாற்றி வருகிறோம். இதற்கமைய இந்த வீட்டுத் திட்டத்திற்கு உதவிகளை வழங்கிய இந்திய அரசாங்கத்திற்கு மீண்டும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.” - என்றார்.

(இந்த நிகழ்வை ஒட்டிய மேலும் செய்திகள் 12, 13, 14ஆம் பக்கங்களில்)

# தமிழ்நாடு மீனவர்கள் கச்சதீவு திருவிழாவை புறக்கணிப்பதில் எந்த அர்த்தமும் இல்லை!

## வடமராட்சி வடக்கு மீனவர் சங்க சமாசங்களின் உப தலைவர் தெரிவிப்பு




"இலங்கை நீதிமன்றத்தினால் ஏற்கனவே நிபந்தனை அடிப்படையில் விடுதலை செய்யப்பட்ட ஒருவரும், ஜி.பி.எஸ் கருவியை கொண்டு அத்துமீறி நுழைந்த இரண்டு படகோட்டிகளுமாக மூவருக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டது. ஏனையோர் விடுவிக்கப்பட்டனர். ஆனால், இந்த மூவருக்காக தமிழகத்தில் கறுப்புக்கொடி போராட்டம் நடத்துவதிலோ கச்சதீவு பெருந்திருவிழாவுக்கு வரமாட்டோம் என்று கூறுவதிலோ எந்தவித அர்த்தமும் இல்லை."

– இவ்வாறு வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச உபதலைவர் நா.வர்ணகுலசிங்கம் தெரிவித்தார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"இந்திய மீனவர்கள் மூவர் இலங்கை சிறையில் அடைக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இராமேஸ்வரம் மீனவர்கள் கறுப்பு கொடி போராட்டம் நடத்தி வருகின்றனர். அடுத்து வரும் சில தினங்களில் இடம்பெறும் கச்சதீவுப் பெருந்திருவிழாவுக்கு வர மாட்டோம் என அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

ஆனால், எல்லை தாண்டியமை தொடர்பாக நீதிமன்றத்தால் நிபந்தனையின் அடிப்படையில் விடுவிக்கப்பட்ட ஒருவர் திரும்பி வந்து மீண்டும் எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபட்டதன் காரணமாகவே அவருக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அதேபோல் ஜி.பி.எஸ். கருவி மூலம் எல்லை தாண்டி வந்த இரண்டு படகோட்டிகளுமாக மூவருக்கும் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நீங்கள் எல்லை தாண்டியதால்தான் அவர்கள் பிடிக்கப்பட்டு இங்கே சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு நீங்கள் தமிழகத்திலே கறுப்புக் கொடிப் போராட்டம் நடத்துவதில் எந்த விதமான நியாயமும் இல்லை. ஏனென்றால் இவர்களுடன் பிடிபட்ட ஏனையோர் விடுதலை செய்யப்பட்டபோது இவர்களுக்கு மாத்திரம் ஏன் தண்டனை வழங்கப்பட்டது என்பதை அவர்கள் சிந்தித்திருக்க வேண்டும்.

இந்த மூவருக்காகவும் நீங்கள் கறுப்புக்கொடி போராட்டம் செய்து நாங்கள் கச்சதீவுக்கு வர மாட்டோம் என்பதில் எந்தவித அர்த்தமும் இல்லை. கச்சதீவு ஓர் ஆலயம். அது வேறு, மீனவர் பிரச்சனை வேறு. இந்த மூன்று மீனவர்களும் ஏன் சிறை வைக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதை நீங்கள் யோசிக்க வேண்டும்." – என்றார்.

## ரயிலுடன் மோதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒன்று ரயிலுடன் மோதி இழுத்துச் செல்லப்பட்டதில் அதில் பயணித்த இளம் தாய் ஒருவரும் அவரின் இரு சிறு பிள்ளகளும் அந்த இடத்திலே உயிரிழந்துள்ளனர்.

கொழும்பில் இருந்து புத்தளம் நோக்கிப் பயணம் செய்த பயணிகள் ரயிலுடன் ஸ்கூட்டி மோதியுள்ளது.

நேற்றுப் பிற்பகல் 3.30 மணிக்கு தனது இரண்டு பிள்ளைகளை மேலதிக வகுப்புக்கு அழைத்துச் சென்ற தாய் பயணித்த ஸ்கூட்டியே ரயிலில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது சுமார் 50 மீற்றர் தூரம் வரை ஸ்கூட்டியே இழுத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பின்னர், உயிரிழந்த தாய் மற்றும் இரண்டு பிள்ளைகளினதும் சடலங்களையும், அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளையும் ரயில் ஊழியர்கள் முந்தல் ரயில் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

ஆராச்சிக்கட்டுவ அடிப்பல பகுதியைச் சேர்ந்த 36 வயதான நான்கு பிள்ளைகளின் தாய் மற்றும் 9 வயதான அவரது மகனும், 7 வயதுடைய மகளும் இந்த விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த தாய் மற்றும் இரண்டு பிள்ளைகளினதும் சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக சிலாபம் வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பற்ற ரயில் கடவையில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை அப்பகுதி மக்களிடையே பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆராச்சிக்கட்டுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.









# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பாடம் புகட்டுவர் மக்கள்

நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமை ஒழிக்கப்படுமா? அந்த முயற்சியின் பெயரில் தற்போதைய ஜனாதிபதித் தேர்தல் ஒரு வருடம் ஒத்திவைக்கப்படுமா? - என்றெல்லாம் பல கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது தொடர்பான பொது நடவடிக்கையை எடுக்குமாறு முன்னாள் சபாநாயகரும் தமது அரசியல் சகாவுமான கரு ஜயசூரியாவிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோரி இருக்கின்றார் என்றும் -

அந்தக் கோரிக்கையின் அடிப்படையில் பல தரப்புகளுடனும் தொடர்பாடல்களை மேற்கொண்டு அந்த முயற்சிகளை ஆரம்பித்துள்ள கரு ஜயசூரியா, அதன் ஒரு கட்டமாக முதலில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாராவுடனும், தொடர்ந்து அந்தக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸாவுடனும் தொடர்பு கொண்டு பேசி இருக்கின்றார் என்ற தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதற்கிடையில் -

நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கும் முயற்சி எடுக்கப்பட்டால் அதற்கு முழு ஆதரவு தரப்படும் என்று சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன கூறி இருக்கின்றார். இந்த முயற்சியை முன்னெடுக்கும் பொறுப்பு முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியாவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது என்று மைத்திரிபால சிறிசேனவும் தகவல் வெளியிட்டிருக்கின்றார்.

ஆனால் இந்த முயற்சிக்கு - நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிக்கும் முயற்சிக்கு - பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவு தெரிவித்தாலும், அதனைக் காட்டி இவ்வருடத்தில் நடைபெற வேண்டிய ஜனாதிபதித் தேர்தலையோ, அதைத் தொடர்ந்து இடம்பெறக் கூடிய நாடாளுமன்றத் தேர்தல்களையோ இங்கு ஒத்திவைப்பதற்கு இடம் அளிக்கவே முடியாது என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்து விட்டது.

ஆயினும், நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிக்கும் தமது எத்தனத்தை கரு ஜயசூரிய வெளிப்படையாகவே தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றார் என்று விடயம் அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

எது, எப்படியோ நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிக்கும் சாட்டில் ஜனாதிபதித் தேர்தலை ஒத்தி வைப்பதற்கு சட்டத்தில் எந்த வாய்ப்புமே - இடமுமே - இல்லவே இல்லை என்று சட்டத்துறைப் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்திருக்கின்றார். இந்த விடயத்தை ஒட்டி அவர் சுட்டிக் காட்டிய அம்சங்கள் கவனிக்கத்தக்கவை: -

+ ஜனாதிபதித் தேர்தலை அறிவிப்பது மற்றும் நடத்துவது ஆகியவை தனித்து தேர்தல் ஆணையத்தின் பணி. அதில் ஜனாதிபதியோ அவரின் செயலகமோ, நாடாளுமன்றமோ தலையிடவே முடியாது.

+ அந்த ஜனாதிபதித் தேர்தல் பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பை தேர்தல் ஆணையம் ஜூலை மாத இறுதியிலோ அல்லது ஒகஸ்ட் மாத முற்பகுதியிலோ கட்டாயம் விடுத்தாக வேண்டும்.

+ செப்டம்பர் 17ஆம் திகதிக்கும் ஒக்டோபர் 17ஆம் திகதிக்கும் இடையில் ஜனாதிபதித்தேர்தல்கட்டாயம்நடந்தாக வேண்டும். அதனை ஒத்திப்போட எந்தச் சட்டத்திலும் இடமில்லை.

+ செப்டம்பர் 17 திகதிக்கும் ஒக்டோபர் 17 ஆம் திகதிக்கும் இடையில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படாவிட்டால் வரும் நவம்பர் 18ஆம் திகதிக்குப் பிறகு, நாட்டின் அரசே சட்டபூர்வ வலிமையை இழந்து செல்லுபடியற்றதாகிவிடும்.

- இப்படி பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கூறுவதுதான் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான சட்ட ஏற்பாடுகளின் நிலைமையாகும். இதனை மீறி எந்த நடவடிக்கையும் அரசமைப்பு ரீதியாக முன்னெடுக்கவே முடியாது என்பதுதான் சட்டபூர்வ கள யதார்த்த நிலைமையாகும்.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிப்பது என்ற சாக்கில், மேலும் ஒரு வருடம் பதவியில் தொடர்வதற்கான திட்டம் ஒன்று குறித்து ஜனாதிபதி ரணிலின் தரப்புப் பரிசீலித்துப் பார்த்தது. எனினும் அதனைக் கேட்பது, அதற்கான மக்கள ஆதரவை அடுத்து நடைபெற வேண்டிய எந்தத் தேர்தலுக்கு முன்னரும் பெற்றுக் கொள்ளவே முடியாது என்ற களநிலைமை ரணில் தரப்புக்கு இப்போது மெல்லப் புரியத் தொடங்கி இருக்கின்றது என்றும் கூறப்பட்டது.

அதனால் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை ஒழித்தல் என்ற யோசனைத் திட்டத்தைச் சற்று தள்ளிப்போடும் நிலைப்பாட்டுக்கு ரணில் தரப்பு வந்து விட்டதாகவும் அறியவந்தது.

எது, எப்படி என்றாலும், ஆட்சி பீடத்திற்கு - அதிகாரத்தில் இருப்போருக்கு - எதிரான எண்ண அலை - மன நிலை - பொதுமக்கள் மத்தியில் உச்சமாக இருக்கையில் வரக்கூடிய எந்த தேர்தலிலும் - வாக்களிப்பிலும் - அரசுக்கு பாடம் புகட்டும் பொதுமக்களின் கருத்து நிலைப்பாடாக வெளிப்படும் என்பது நிச்சயம்.

# சிறப்புச் செயலி ஊடாக தமிழக வெற்றிக் கழகத்தில் 2 கோடி உறுப்பினர்களை சேர்ப்பதற்கு நடவடிக்கை



நடிகர் விஜய் புதிதாக ஆரம்பித்துள்ள தமிழக வெற்றிக் கழகத்தால் நவீன வசதிகளுடன் உருவாக்கப்பட்டு வரும் சிறப்புச் செயலி வாயிலாக இரண்டு கோடி உறுப்பினர்கள் சேர்க்க இலகக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய உடனடியாக உறுப்பினர்களை சேர்க்க நடவடிக்கை எடுக்குமாறு நிர்வாகிகளுக்கு தமிழக வெற்றிக் கழகம் தலைமை உத்தரவு பிறப்பித்துள்ளது.

நடிகர் விஜய் தமிழ வெற்றிக் கழகம் என்ற கட்சியை தொடங்கியுள்ளார். கட்சி தொடங்கிய அறிவிப்பை கடந்த 2 ஆம் திகதி விஜய் அதிகாரபூர்வமாக அறிவித்தார். தேர்தல் ஆணையம் அங்கீகாரம் வழங்கியதும் கட்சியின் கொடி, சின்னம் அறிவிக்கப்படும் என்று அவர் அறிவித்துள்ளார்.

இந்த நிலையில், தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் பனையூரில் உள்ள தமிழக வெற்றிக் கழக தலைமை நிலைய செயலக அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் கட்சியில் புதிய உறுப்பினர்கள் சேர்க்கை மற்றும் உட்கட்சி கட்டமைப்பு விரிவாக்கம் தொடர்பாக கட்சி நிர்வாகிகள் ஆலோசனை நடத்தினர்.

இதையடுத்து தமிழக வெற்றிக் கழகம் வெளியிட்ட அறிக்கையில்,

"நம் தலைவரின் ஆணைப்படி, தமிழக வெற்றிக் கழகத்தின் உள்கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில் உறுப்பினர் சேர்க்கை முகாம்கள் மாநிலம் முழுவதும் மாவட்ட மற்றும் சட்டமன்றத் தொகுதிகள் வாரியாக நடத்தப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நமது தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விரைவில் முதற்கட்டமாக மகளிர் தலைமையிலான உறுப்பினர் சேர்க்கை அணி நிர்வாகிகள் அறிவிக்கப்பட உள்ளனர். உறுப்பினர் சேர்க்கை அணியுடன் இணைந்து, புதியதாக நியமிக்கப்பட இருக்கும் மாவட்டப் பொறுப்பாளர்கள், சட்டமன்றத் தொகுதிப் பொறுப்பாளர்கள் ஆகியோர் முழு அளவில் உறுப்பினர் சேர்க்கைக்கான ஒருங்கிணைப்புப் பணிகளில் ஈடுபட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தமிழக வெற்றிக் கழகத்தால் நவீன வசதிகளுடன் உருவாக்கப்பட்டு வரும் சிறப்புச் செயலி வாயிலாக உறுப்பினர் சேர்க்கை முகாம்களை மாவட்ட, மாநகர, நகர, பேரூர். ஒன்றிய, ஊராட்சி, வார்டு வாரியாக முழுவீச்சில் நடத்தி, புதிய உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டும். தலைவரின் ஆணையை ஏற்று, இரண்டு கோடி உறுப்பினர்கள் என்று இலக்கு நிர்ணயித்து, உறுப்பினர் சேர்க்கைப் பணிகளில் கூடுதல் கவனம் செலுத்துவதுதான் நமது முதற்கட்டப் பணியாகும்.

ஒவ்வொரு தேர்தலிலும் புதிய வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. தற்போது வெளியிடப்பட்டுள்ள வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ள, புதிய வாக்காளர்கள் மற்றும் மகளிர் உள்ளிட்ட வாக்காளர்கள் அனைவரையும் தமிழக வெற்றிக் கழகத்தில் உறுப்பினர்களாகச் சேர்க்கக் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு, மாவட்ட ரீதியாகவும், சட்டமன்றத் தொகுதி வாரியாகவும் புதிய திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியல் தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்டுள்ளது. மாவட்ட, சட்டமன்றத் தொகுதிப் பொறுப்பாளர்கள், தங்கள் நிர்வாகத்திற்கு உட்பட்ட சட்டமன்றத் தொகுதிகள் தொடர்புடைய வாக்காளர் பட்டியலின் நகலை முறைப்படி பெற்றுக்கொள்ள வேண்டும்.

மாவட்ட, சட்டமன்றத் தொகுதிப் பொறுப்பாளர்கள், தங்களது நிர்வாகத்திற்கு உட்பட்ட தொகுதிகளில் உள்ள வாக்காளர்கள் பற்றிய விவரங்களை அறிந்துகொள்ள வேண்டும். பூத் கொமிட்டி அமைத்து, பூத் வாரியாக வாக்காளர்களில் கட்சி சார்புள்ளவர்கள் யார்? யார்? எந்தக் கட்சியையும் சாராதவர்கள் யார்? யார்? என்ற விவரங்களையும் சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

நமது கழகத் தலைவரின் உத்தரவின் பேரில், மாவட்ட, சட்டமன்றத் தொகுதிப் பொறுப்பாளர்களுக்கு விதிக்கப்படும் நிபந்தனைகள், கட்டுப்பாடுகளை ஏற்றுச் செயல்படுவதைக் கடமையாகக் கருத வேண்டும் உள்ளிட்ட அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன." – என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# பெண் பத்திரிகையாளர்கள் குறித்து சர்ச்சைக் கருத்து நடிகர் எஸ்.வி.சேகருக்கு ஒரு மாத சிறைத் தண்டனை

## சென்னை சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பு



பெண் பத்திரிகையாளர்கள் குறித்த சர்ச்சை கருத்து தொடர்பான வழக்கில் நடிகர் எஸ்.வி.சேகர்க்கு ஒரு மாதம் சிறை தண்டனை விதித்து சென்னை சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2018 ஆம் ஆண்டு பெண் பத்திரிகையாளர்கள் குறித்து சமூக வலைதளங்களில் தரக்குறைவாக விமர்சித்திருந்த கருத்தை நடிகரும், அரசியல் பிரமுகருமான எஸ்.வி.சேகர் தனது முகநூல் பக்கத்தில் பகிர்ந்திருந்தார்.

இதைத் தொடர்ந்து அவர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி தமிழ்நாடு பத்திரிகையாளர்கள் பாதுகாப்பு சங்கத்தின் சார்பில் செயலாளர் மிதார் மொய்தின் அளித்த புகாரின் அடிப்படையில், சென்னை மத்திய குற்றப்பிரிவின் சைபர் கிரைம் பிரிவினர் இந்திய தண்டனை சட்டம் மற்றும் பெண்கள் மீதான கொடுமைகள் தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்தனர்.

இந்த வழக்கில் கடந்த 2019ஆம் ஆண்டு சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள எம்.பி, எம்.எல்.ஏக்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

விசாரணை முடிவடைந்து நேற்று தீர்ப்பளித்த நீதிபதி ஜி.ஜெயவேல்,

"புகார் குறித்த குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகளான அமைதியை சீர் குலைத்தல், தெரிந்த குற்றம் என கருதி மிரட்டல் விடுத்தல், பெண்கள் மீதான கொடுமைகள் தடுப்பு சட்டத்தின் கீழ் நடிகர் எஸ்.வி.சேகருக்கு ஒரு மாதம் சிறை தண்டனை மற்றும் 15 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்படுகிறது" என தீர்ப்பளித்தார்.

இதனையடுத்து, அபராத தொகையை செலுத்திய பின்னர் தண்டனையை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது என எஸ்.வி.சேகர் தரப்பில் மனு தாக்கல் செய்ததை ஏற்று, தண்டனையை நிறுத்தி வைத்து நீதிபதி உத்தரவிட்டார்.

# ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்சி நவல்னி கொலை செய்யப்பட்டிருக்கலாமெனச் சந்தேகம்



விளாடிமீர் புட்டினையும் அவரது நிர்வாகத்தையும் கடுமையாக விமர்சித்து வந்த எதிர்க்கட்சி தலைவர் அலெக்சி நவல்னி சிறைக்கூடத்தில் கொலை செய்யப்பட்டார் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புட்டினின் உத்தரவிற்கு அமைய சிறையினுள் வைத்து கொலை செய்யப்பட்டுள்ளார் என அவரின் கட்சி தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

அவருக்கு திடீர் என ஏற்பட்ட நோய் காரணமாகவே மரணம் ஏற்பட்டுள்ளது என சிறைகூட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உடலை பார்வையிட சென்ற அவரது தாயார் மற்றும் வழக்கறிஞர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர்கள் பலாத்காரமாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர் என எதிர்க்கட்சிகளின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து பல நாடுகளில் ரஷ்ய தூதுவராலயங்களுக்கு முன்னதாக ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

ரஷ்யாவில் இடம்பெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் நூற்றுக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அலெக்சி நவல்னி தொடர்பாக ரஷ்யா மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பாக பல வெளிநாட்டு தலைவர்கள் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

ரஷ்யாவில் ஜனநாயகத்தை செயல்படுத்த அலெக்சி நவல்னி பெரிய அளவில் பாடுபட்டார் என பிரித்தானிய பிரதமர் ரஷி சுனக் தமது அனுதாப செய்தியில் தெரிவித்துள்ளார்.

# ஆப்கானிஸ்தாலில் பாரிய நிலச்சரிவு ஐவர் பலி; 25 பேரைக் காணவில்லை



ஆப்கானிஸ்தானின் – நூரிஸ்தான் மாகாணத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானின் கிழக்கு பகுதியில் கடந்த சில நாள்களாக பலத்த மழை பெய்து வருகிறது.

இந்தநிலையில், நூரிஸ்தான் மாகாணம், நூர்கிராம் மாவட்ட மலைப்பகுதியில் உள்ள ஒரு கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு கனமழையால் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இதில் 20 இற்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்து விழுந்துள் என.

வீடுகளில் இருந்தவர்கள் இடிபாடுகளில் சிக்கிக் கொண்டுள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

தகவல் அறிந்த மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்குச் சென்று மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

நிலச்சரிவில் பாதிக்கப்பட்டவர்களில் 5 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன எனவும் 25 பேரைக் காணவில்லை என்றும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# சரணடைந்த ரஷ்ய விமானி ஸ்பெயினில் சடலமாக மீட்பு







2023 கோடையில் ரஷ்ய எம்.ஐ.-8 ஹெலிகொப்டருடன் உக்ரைனில் சரணடைந்த ரஷ்ய விமானி மாக்சிம் குஸ்மினோவ் ஸ்பெயினில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

“அவர் உக்ரைனில் தங்குவதற்குப் பதிலாக ஸ்பெயினுக்குச் செல்ல முடிவு செய்தார். எங்களுக்குத் தெரிந்தபடி, அவர் தனது முன்னாள் காதலியை தனது இடத்திற்கு அழைத்தார், பின்னர் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.” என உக்ரைன் உளவுத்துறை தெரிவித்துள்ளது.

குஸ்மினோவை கொலை செய்தவர்கள் தப்பிச் சென்றனர் என கருதப்படும் எரிந்த கார் அருகில் கண்டுபிடிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு ஒகஸ்ட் 23 ஆம் திகதி ரஷ்ய எம்.ஐ -8 ஹெலிகொப்டர் நீண்டகால சிறப்பு நடவடிக்கையின் விளைவாக உக்ரைனில் சரணடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

உக்ரைனில் சரணடைந்ததற்காக ரஷ்யர்கள் குஸ்மினோவை ஒரு “துரோகி“ என்று விமர்சித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# கடற்படையின் வடக்குத் தளபதியை சந்தித்துப் பேசினார் வடக்கு ஆளுநர்

வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸூக்கும் இலங்கை கடற்படையின் வடபிராந்தியக் கட்டளைத்தளபதி ரியல் அட்மிரல் காஞ்சன பானகொடவுக்கும் இடையிலான சந்திப்பு வடக்குமாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று நடை பெற்றது.

வடக்குமாகணத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக கடற்படையினரிடமிருந்து ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்வது தொடர்பில் உள்ள சிக்கல்கள் பற்றி இதன்போது கலந்துரையாடப்பட்டது.

உள்நாட்டு மற்றும் சர்வதேச சுற்றுலாப்பயணிகளின் அபிமானத்தை வெற்றிகொள்ளும் நோக்கில், கடற்படையின் வடபிராந்தியத்திற்குள் காணப்படும் சுற்றுலாத்தளங்களை அபிவிருத்தி செய்வதற்கான ஒத்துழைப்பை வழங்குமாறு ஆளுநர் இதன் போது கோரிக்கை விடுத்தார். இந்த விடயம் தொடர்பில் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கத் தயாரென வடபிராந்திய கட்டளைத் தளபதி இதன் போது தெரிவித்தார்..

# வடக்கு மீனவர்களின் நலன் தொடர்பில் ஆளுநர் மறந்தமை வருத்தமளிக்கிறது!

## மீனவ தொழிற் சங்க இணைப்பாளர் கவலை தெரிவிப்பு

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாண ஆளுநர் மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் நலன் தொடர்பில் மறந்தமை வருத்தமளிப்பதாக அகில இலங்கை மீனவ மக்கள் தொழிற் சங்கத்தின் வடமாகாண இணைப்பாளர் அ.அன்னராசா தெரிவித்தார்.

இது தொடர்பில் அ.அன்னராசா மேலும் விவரம் தெரிவித்தவை வருமாறு:-

கடற்படையின் வடபிராந்தியக் கட்டளைத் தளபதி ரியல் அட்மிரல் காஞ்சன பானகொடவை வடக்கு ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸ் நேற்றைய தினம் சந்தித்து கலந்துரையாடியமையோடு அது தொடர்பான செய்திக் குறிப்பையும் ஆளுநர் செயலகமே ஊடகங்களிற்கு அனுப்பி வைத்ததாக ஊடகங்கள் செய்தியிட்டன.

அந்தச் செய்திக் குறிப்பில் உள்ள விடயங்களில் வெறுமனே பொருளாதாரத்தை ஈட்டுவதற்கான பேச்சு வார்த்தை இடம்பெற்ற தோற்றமே வெளிப்படுகின்றதே அன்றி, கடலோடு தொடர்புபட்ட பாதுகாப்பு விடயங்களோ அல்லது மீனவர்களின் வாழ்வாதாரமோ அல்லது கடலில் அமுல்படுத்தபட வேண்டிய சட்டங்கள் தொடர்பிலோ பிரஸ்தாபிக்காதமை வருத்தமளிக்கின்றது.

இதிலே மீனவர்கள் நீண்டகாலமாக கோரிவரும் இரு விடயங்களான 2018 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட வெளிநாட்டுப் படகை கட்டுப்படுத்தும் சட்டம் மற்றும் 2017ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தாமையினால் மீனவர் சந்திக்கும் நெருக்கடிகள் தொடர்பில் எடுத்துக்கூறி, உள்ள சட்டத்தை நடைமுறைப்படுத்த அறிவுறுத்தியிருக்க முடியும்.

இதற்கான வாய்ப்பிருந்தும் இவற்றை கோராதமை எமக்கு வருத்தமளிக்கின்றது.

இதேநேரம் சுற்றுலாவினை அதிகரிப்பது தொடர்பில அதிகம் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. சுற்றுலா எனில் அதில் கடல் கடந்த தீவுகள் முக்கிய இடம் பிடிக்கும். சுற்றுலா அதிகரிக்கும்போது அங்கே வாழும் மக்கள் இந்த இரு சட்டங்களையும் நடைமுறைப்படுத்தாமல் இருப்பின் அந்தத் தீவுகளின் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்படையும் எனபதனாலேயே இவை தொடர்பில் பேசாதமை வருத்தமளிப்பது மட்டுமல்லாது கடல் கடந்த தீவக மக்களின் நலனை அரசு திட்டமிட்டு புறக்கணிக்கின்றதா என்ற சந்தேகமும் எழுகின்றது. - என்றார்.



# ‘பாரத்-லங்கா’ வீட்டுத் திட்டத்தின் நான்காம் கட்டம் ஜனாதிபதி ரணில் தலைமையில் அங்குரார்ப்பணம்!

## ஒரே நாளில் 1,300 வீடுகளுக்கு அடிக்கல்

“நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் பங்காற்றிய மலையக தமிழ் மக்களின் பொருளாதார மற்றும் சமூக உரிமைகளை நிலைநாட்ட அரசாங்கம் அர்ப்பணிப்புடன் இருக்கின்றது. கட்சி பேதமின்றி மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் பிரதிநிதிகளையும் ஒன்றிணைத்துச் செயற்படுத்த வழிசெய்யும் முன்மொழிவுகளை அடுத்த மாதத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்க்கிறோம்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியின்கீழ்தோட்டத்தொழிலாளர்களுக்காக 10 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் ‘பாரத் – லங்கா’ வீடமைப்புத் திட்டத்தின் நான்காம் கட்டம் ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்து நேற்று இணைய வழியில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இந்தநிகழ்வில்உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

‘பாரத் –லங்கா’ வீடமைப்புத் திட்டத்தின் நான்காம் கட்டத்தின் கீழ் 10 மாவட்டங்களில், 45 தோட்டங்களில், 1300 வீடுகளை நிர்மாணிப்பதற்கு அடிக்கல் நாட்டும் வகையில் ஒன்லைன் ஊடாக நினைவுப் பலகை திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் இலங்கை இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோர் இணைந்து கொண்டனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)











# ‘பாரத்-லங்கா’ வீட்டுத் திட்டத்தின் நான்காம் கட்டம் ஜனாதிபதி ரணில் தலைமையில் அங்குரார்ப்பணம்!

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுகையில் –

“10 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்கான முதல் கட்டமாக 1,300 வீடுகளுக்கான அடிக்கல் நடப்பட்டுள்ளது. இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடியின் அரசாங்கத்தின் நன்கொடைகளைப் பயன்படுத்தி இந்தத் திட்டத்தை முன்னெடுக்கிறோம். மலையக தமிழ் மக்கள் இலங்கைக்கு வந்து 200 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு இந்திய அரசாங்கம் இந்த வீட்டுத்திட்டத்தை வழங்கியது.




அதற்காக இந்திய அரசுக்கு மீண்டும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் பங்காற்றிய மலையக தமிழ் மக்கலுக்கென காணியும் வீடும் இல்லாமை பெரும் குறைபாடாக இருந்தது. உண்மையில், குறிப்பிட்ட காலம் அவர்களுக்கு வாக்குரிமை கூட இருக்கவில்லை. எனினும், அந்த அரசியல் உரிமைகள் அனைத்தும் வழங்கப்பட்டுள்ளன. எனினும், பொருளாதார, சமூக உரிமைகளை வழங்க வேண்டியிருக்கிறது. இதில் ஒரு பகுதியை நாம் இன்று முன்னெடுத்துள்ளோம்.

வீடுகளை அமைப்பதற்கு காணிகளைப் பெற வேண்டியுள்ளது. இதற்காக தோட்டக் கம்பனிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டியுள்ளது. சில நேரம் அரச காணிகளை வழங்க நேரிடும். இதற்கமைய வீடமைப்புத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம். அடுத்து மலையக தமிழ் மக்களின் கல்வி நிலைமை ஏனைய பிரதேசங்களை பின்தங்கி இருக்கிறது. தமிழ் பிரதேச பாடசாலைகளை, ஏனைய பாடசாலைகளின் நிலைமைக்கு நிகராக மேம்படுத்துவதற்கான வேலைத் திட்டத்தை அனைத்துப் பிரதேச செயலகங்கள் ஊடாகவும் முன்னெடுக்கத் திட்டமிட்டு வருகிறோம். ஏனைய மக்களைப் போல இந்த மக்களுக்கும் அனைத்து வசதிகளையும் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

மலையகத்தில் வாழும் அனைவரும் தோட்டத் தொழிலாளர்களல்லர். கல்வி பெறுவதற்கான உரிமையை உறுதி செய்வதோடு தொழிற்பயிற்சி பெறுவதற்கான வசதிகளை இளைஞர் யுவதிகளுக்கு வழங்க வேண்டும். தோட்டத் தொழிலாளர்களாக அவர்களைத் தொடர்ந்து வைத்திருக்க முடியாது. தோட்ட ஒப்பந்தங்களுக்கு அமைய காணித் துண்டொன்றை வழங்கி சிறுதேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு நிகராக அந்த மக்களை மேம்படுத்துவது குறித்து ஆராயப்படுகிறது.

அமைச்சர் ஜீவன் தொண்டமான் இது தொடர்பில் அதிக ஆர்வத்துடன் பணியாற்றி வருகிறார். அதேபோல், இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் உட்பட ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இந்த அனைவரையும் இணைந்துக் கொண்டு, கட்சி பேதமின்றி, இதுகுறித்த யோசனைகளை முன்வைக்குமாறுகேட்டுக்கொள்கிறேன்.“ – என்றார்.

# மலையக மக்களுக்கான அர்ப்பணிப்புக்காக பிரதமர் மோடிக்கு நன்றி தெரிவிக்கின்றோம்

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

“இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளி தமிழ் மக்களுக்கான அர்ப்பணிப்புக்காக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.”

– இவ்வாறு நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

‘பாரத் – லங்கா’ வீடமைப்புத் திட்டத்தின் நான்காம் கட்டம் அங்குரார்ப்பண நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“இந்தத் திட்டம் வெறும் 1,300 வீடுகளைக் கொண்ட திட்டம் அல்ல. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்தின் பின்னர் எமக்கு வழங்க உறுதியளிக்கப்பட்ட 10 ஆயிரம் வீடுகள் திட்டத்தின் அங்குரார்ப்பணம் இது. இலங்கையில் உள்ள இந்திய



வம்சாவளித் தமிழ் மக்களுக்கான அர்ப்பணிப்புக்காக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எமது நீண்டநாள் கனவு இன்று நனவாகிறது. நாடு பொருளாதார நெருக்கடியையும் அரசியல் நெருக்கடியும் எதிர்கொண்டது. அரசியல் சிக்கல் ஏற்பட்ட போது ரணில் விக்கிரமசிங்க மாத்திரம்தான் நாட்டைக் கட்டியெழுப்ப முன்வந்தார். நாட்டின் ஜனாதிபதியாக எமது ஆதரவையும் அவர் கோரினார்.

10 ஆயிரம் வீட்டுத் திட்டத்தை மீள ஆரம்பிப்பதற்கான சூழலை உருவாக்குமாறு ஜனாதிபதியிடம் கோரியிருந்தேன். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பி, நமக்கு ஒரு விடிவைத் தந்திருக்கிறார்.

நான் அமைச்சுப் பொறுப்பை ஏற்றபோது 100 வீடுகளைக் கட்டக் கூட நிதி இருக்கவில்லை. ஆனால் இன்று 10 ஆயிரம் வீட்டுத் திட்டத்தை ஆரம்பிக்க முடிந்ததை பெருமையாகக் கருதுகிறேன். மக்களுக்கு காணி உறுதியைப் பெற்றுக் கொடுக்கும் திட்டத்திற்கு ஜனாதிபதி 4 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளார். அதற்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.”– என்றார்.

# மலையகத் தமிழ் மக்களை ஆதரிப்பதில் பிரதமர் மோடி அர்ப்பணிப்புடன் உள்ளார்

## இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஷா தெரிவிப்பு

"இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளி தமிழ் சமூகத்தை ஆதரிப்பதில் பிரதமர் நரேந்திர மோடி ஆழமான மற்றும் உறுதியான அர்ப்பணிப்புடன் உள்ளார்."

– இவ்வாறு இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஷா தெரிவித்தார்.

'பாரத் – லங்கா' வீடமைப்புத் திட்டத்தின் நான்காம் கட்டம் அங்குரார்ப்பண நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"இந்தியாவினால் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களில் இந்தத் திட்டம் மிகமுக்கியமான ஒன்றாகும். இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளி தமிழ் சமூகத்தை ஆதரிப்பதில் இந்திய அரசினதும் பிரதமர் நரேந்திர மோடியினதும் ஆழமான மற்றும் உறுதியான அர்ப்பணிப்பை இது வலியுறுத்துகிறது.



"இந்த வீடமைப்புத் திட்டமானது ஆறு மாகாணங்களில் உள்ள 250 இற்கும் மேற்பட்ட தோட்டங்களில் உள்ள பின்தங்கிய சமூகங்களுக்குப் பயனளிக்கிறது. தோட்டத் தொழிலாளர்களுக்கு 4 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் திட்டத்திற்கு மேலதிகமாகவே இந்த 10 ஆயிரம் வீட்டுத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. 4 ஆயிரம் வீடுகளில் பெரும்பாலானவை ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தின் ஒரு வீட்டு அலகிற்கான செலவு மூன்று மடங்காக அதிகரித்திருப்பதன் மூலம், மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப இந்தத் திட்டத்திற்கான எங்கள் வலுவான அர்ப்பணிப்பை இது பிரதிபலிக்கிறது. இதனால், இந்திய அரசிற்கு பெருமளவு தொகையைப் பொறுப்பேற்க வேண்டியுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு சொந்த வீடுகளை வழங்கி அவர்களை வலுப்படுத்துவதே வீட்டுத் திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இந்தத் திட்டத்தின் ஊடாக அவர்களின் நல்வாழ்வில் பாரிய மாற்றம் ஏற்படும். லயன் அறைகளுக்குப் பதிலாக இரண்டு படுக்கையறைகள் கொண்ட சொந்த வீட்டில் வசிக்கும் அவர்களின் கனவை இந்தத் திட்டம் நிறைவேற்றும்." – என்றார்.

# மாணவர்களை இடைநிலை வகுப்புகளுக்கு சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரல்

2024 ஆம் ஆண்டுக்கான தரம் 1, 5, 6 மற்றும் உயர்தரம் தவிர்ந்த ஏனைய, இடைநிலை வகுப்புகளுக்கு மாணவர்களை சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள், அந்தந்தப் பாடசாலைகளில் நேரடியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

பாடசாலைகளில் வெற்றிடங்கள் காணப்படுமாயின், அந்தந்தப் பாடசாலைகளின் அதிபர்களால், கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின்படி நேர்முகத் தேர்வுகளை நடத்தப்படும்.

பின்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் பெயர்ப்பட்டியலை அதிபர்களின் ஊடாக அமைச்சின் அனுமதிக்காக அனுப்பப்படும்.

இதேவேளை, ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மாத்திரமே பாடசாலைகளில் 6 ஆம் தரத்துக்கு மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவர் எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

# கஹவத்தை இரட்டை கொலை: குற்றவாளிக்கு மரண தண்டனை

இரத்தினபுரி – கஹவத்தை கொடக்கதென்ன பகுதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று இரத்தினபுரி மேல் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது, மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19 ஆம் திகதி இடம்பெற்ற கொலைச் சம்பவத்தில் தாய் மற்றும் மகள் ஆகியோர் கொலை செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.





# ஜப்பானிய அரசாங்கத்திடம் இருந்து 40 ஆயிரம் மெட்ரிக் தொன் டீசல்

இலங்கையின் சுகாதார அமைப்புக்குள் போக்குவரத்து சேவைகளை வலுப்படுத்துவதற்காக ஜப்பானிய அரசாங்கத்திடம் இருந்து 40 ஆயிரம் மெட்ரிக் தொன் டீசலை இலங்கை மானியமாகப் பெற்றுள்ளது.

இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி ஹிடேகி மற்றும் சுகாதார அமைச்சர் கலாநிதி ரமேஷ் பத்திரன ஆகியோர் முன்னிலையில் இந்த டீசல் மானியத்தை கையளிக்கும் நிகழ்வு உத்தியோகபூர்வமாக கொழும்பு துறைமுகத்தில் நேற்று நடைபெற்றுள்ளது.

அதேநேரம், மேற்படி டீசல் மானிய முகாமைத்துவத்தை, வெளிப்படையான மற்றும் பொறுப்பான வகையில் உறுதி செய்வதற்காக அதிநவீன எரிபொருள் முகாமைத்துவ தகவல் அமைப்பொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.



# இலங்கைச் சிறையில் வாடும் 3 தமிழக மீனவர்களின் விடுதலையைக் கோரி ஜெயசங்கரிடம் விண்ணப்பம்

(ந.லோகதயாளன்)

இலங்கை சிறையில் உள்ள தமது உறவுகளின் விடுதலைக்கு விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு இராமேஸ்வரம மீனவர்கள் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெயசங்கரிடம் மனு ஒன்றைக் கையளித்தனர்.

இலங்கை கடறபரப்பிற்குள் 2024-02-04 அன்று இரு படகுகளில் எல்லை தாண்டினர் எனக் கூறப்படும் இராமேஸ்வரம் மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் இருந்த சமயம் இரு படகுகளின் ஓட்டிகளிற்கும் தலா 6 மாதச் சிறைத் தண்டனையும் மேலும் ஒரு மீனவர் இரண்டாவது தடவையும் கைது செய்யப்பட்டார் என்பதன் அடிப்படையில் ஒரு வருடச் சிறைத் தண்டனையும் விதித்து ஊர்காவற்றுறை நீதிமன்றம் தீர்ப்பளித்தது.



இவ்வாறு இலங்கையில் சிறைவைக்கப்பட்டுள்ள 3 இராமேஸ்வரம் மீனவர்களையும் உடன் விடுவிக்க வேண்டும் எனத் தெரிவித்து போராட்டம் நடத்திவரும் இராமேஸ்வரம் மீனவ அமைப்புகள் நேற்று புதுடில்லியில் வெளியுறவு அமைச்சர் ஜெயசங்கரையும் சந்தித்து கோரிக்கை மனுக்களைக் கையளித்துள்ளனர்.



# வெல்லாவெளிக்குத் திடீரென்று படையெடுத்த காட்டுயானைகள்

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப் பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட் பட்ட வெல்லாவெளி, மண்டூர் பகுதிக்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை வேளையில் எட்டு காட்டு யானைகள் கூட்டமாகப் படையெடுத்து வந்துள்ளன.

இதனால் அப்பகுதியிலுள்ள மக்கள் அல்லோலகல்லோலப்பட்டுள்ளனர்.

காட்டு யானைகள் கூட்டமாக அப்பகுதிக்குப் படையெடுத்து வருகின்றன எனப் போரதீவுப்பற்றுப் பிரதேச செயலாளர் சோ.ரங்கநாதனுக்குத் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் பிரதேச செயலாளரின் தலைமையில் வனஜீவராசிகள் பாதுகாப்பு அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள், கிராம சேவகர்கள், பொதுமக்கள் எனப் பலர் ஒன்றிணைந்து காட்டு யானைக் கூட்டத்தை அப்புறப் படுத்துவதற்கு முயற்சி எடுத்தனர்.

வனஜீவராசிகள் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் யானை வெடிகள் வைத்து மிக நீண்ட நேர போராட்டத்திற்கும், பலத்த பிரயத்தனத்திற்கு மத்தியிலும் மாலை அப்பகுதியிலிருந்து ஒருவாறு காட்டு யானைக் கூட்டத்தை அப்புறப் படுத்தியுள்ளனர். எனினும் அப்பகுதியிலுள்ள கிராமங்களை அண்மித்துள்ள பற்றைக் காடுகளிலேதான் அக் காட்டு யானைகள் தங்கி நிற்கின்றன. அப்பகுதியில் என்றுமில்லாதவாறு மிக அண்மைக் காலமாக காட்டு யானைகளின் ஆக்கிரமிப்புக்கள் அதிகரித்துள்ளன.

இந்நிலையில் அங்குள்ள காட்டு யானைகளை நிரந்தரமாகத் துரத்தி அல்லது பிடித்துக் கொண்டு போய் சரணாயலங்களுக்குள் விடுமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

மக்கள் தமது குடியிருப்புக்களை அண்டியுள்ள பற்றைகளையும், விவசாய நிலங்களையும் அண்மித்துள்ள வாய்க்கால்களிலுமுள்ள பற்றைகளையும் அவ்வப்போது வெட்டி அகற்றும் பட்சத்தில் கிராமங்களை அண்மித்து காட்டுயானைகள் தங்கி நிற்காமல் வெளியேறிவிடும். எனவே இவ்விடயத்தில் அப்பகுதி பொது மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.







# பெருந்தோட்டப் பயிர்களின் அபிவிருத்தி குறித்து கவனம்

நாட்டில் பயிரிடப்படும் நெற்செய்கைக்கு சமமாக தேயிலை, தென்னை மற்றும் இறப்பர் போன்ற பெருந்தோட்ட பயிர்களின் அபிவிருத்தி தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பு கவனம் செலுத்தியுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பினர், எல்பிடிய – அத்துகோரலை தொழிற்சாலைக்கும், அகலவத்தை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்துக்கும் அவர் விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

விவசாய அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க மேற்படி விஜயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கையில் நெல், தேயிலை, இறப்பர் மற்றும் தென்னை போன்ற பயிர்ச் செய்கைகளுக்கு உதவிகளை வழங்கவுள்ளதாகவும் இதன்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

















# இன்றைய ராசி பலன்கள் - 20.02.2024




இன்று உங்களுக்கு மறக்க முடியாத நாள். உங்கள் முயற்சி மூலம் இலக்குகளை அடைவீர்கள். ஆன்மீக ஈடுபாடு மகிழ்ச்சியைத் தரும்.

பணியிடத்தில் பாராட்டுகளைப் பெறுவீர்கள். உங்களுக்குள் காணப்படும் திறமைகளை பயன்படுத்தி உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் இனிமையாக நடந்து கொள்வீர்கள். இதனால் இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று அதிக பணம் சம்பாதிப்பீர்கள். அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் காணப்படும். இன்று முதலீட்டுக்கான முயற்சிகளை எடுக்கலாம்.

உங்களிடம் காணப்படும் உறுதி மற்றும் தைரியம் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




இன்று சில சவால்களை சந்திக்க நேரும். வெற்றி கிடைப்பதற்கு உங்கள் அணுகுமுறையில் யதார்த்தம் தேவை. ஆன்மீக ஈடுபாடு உதவிகரமாக இருக்கும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். அதனை எப்படி சமாளிப்பது என்று உணர்ந்து சமாளிக்க வேண்டும்.

உங்களிடம் காணப்படும் ஈகோ காரணமாக மகிழ்ச்சி குறைந்து காணப்படும். உங்கள் துணையுடன் நல்லுறவு ஏற்படுத்த ஈகோவைக் கைவிடுங்கள்.

இன்று அதிக செலவினங்கள் ஏற்படும். கட்டுப்படுத்த முடியாத அளவில் இருப்பதன் காரணமாக பணத்தை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் காதுகளில் ஏற்படும் பிரச்சினை உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று பொறுமையாக இருக்க வேண்டும். சமயோசிதமாக செயல்பட வேண்டும். அதிகமாக சிந்திப்பதை தவிர்க்க வேண்டும்.

இன்று உங்கள் சக பணியாளர்களால் தொல்லைகள் ஏற்படும். எனவே தவறுகளை குறைத்து சிறப்பாக பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

பயணத்தின்போது பண இழப்புகள் ஏற்படலாம். பணத்தை கவனமாக கையாள வேண்டும். பணத்தை முறையாக பராமரிக்க தெரிந்து கொள்ளுங்கள்.

ஆரோக்கியத்தில் சற்றே பின்தங்கிய நிலை காணப்படும். உங்களுக்கு முதுகு வலி ஏற்படலாம்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்களுடைய இனிமையான பேச்சின் மூலம் பிறரைக் கவர்வீர்கள். உங்கள் மனதில் நம்பிக்கையான எண்ணங்கள் ஏற்படும்.

பணியிடச் சூழல் உங்களுக்கு அனுகூலமாக இருக்கும். திட்டமிட்டப்படி பணிகள் சிறப்பாக நடக்கும். இதன் காரணமாக நீங்கள் உற்சாகமாக இருப்பீர்கள்.

உங்கள் துணையுடன் திருப்திகரமான நிலை காணப்படும். உங்கள் துணையுடன் இணைந்து விருந்துக்கு ஏற்பாடுகள் செய்வீர்கள். நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்றைய நாளை புதிய முதலீடுகளை செய்வதற்கு பயன்படுத்தலாம். உற்சாகம், உறுதி மற்றும் ஆற்றலுடன் காணப்படுவீர்கள். இது உங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக வைத்திருக்க உதவும்.




இன்று சிறந்த நாளாக இருக்கும். நட்பான அணுகுமுறை தேவை. அது வாழ்க்கையின் நன்மைகளையும் தீமைகளையும் உணர வைக்கும்.

உங்கள் சக பணியாளர்களிடம் நல்லுறவைக் கொண்டிருப்பீர்கள். உங்கள் பணிகளை முடிக்க அவர்கள் தகுந்த நேரத்தில் ஆதரவு தருவார்கள்.

உங்கள் துணையுடன் பரஸ்பர அனுசரணை மூலம் உறவை வலுப்படுத்தலாம். உங்கள் நட்பான அணுகுமுறை மூலம் உங்கள் துணையை மகிழ்விக்கலாம்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். இன்று உற்சாகத்துடனும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள்.




இன்று நீங்கள் ஆற்றும் அனைத்து செயல்களிலும் வெற்றி கிடைக்கும். உங்களுக்கென ஒரு சிறப்பு அம்சத்தை உருவாக்கிக்கொண்டு முன்னேறுவீர்கள்.

குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க திட்டமிட வேண்டும். கெட்ட பெயர் ஏற்படுத்தாத வகையில் பணியாற்றும் முறைகளில் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் நல்லுறவை பராமரிப்பீர்கள். இன்று மகிழ்ச்சி காணப்படும்.

நீங்கள் சிறந்த முறையில் பணம் சம்பாதிக்க முடியும் என்பதால் இன்றைய நாள் சிறப்பாக இருக்கும். உங்களிடம் உள்ள பணம் கொண்டு நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

நீங்கள் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள். உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக உங்கள் தேக ஆரோக்கியம் திடமாக இருக்கும்.




கோவிலுக்கு செல்வதன் மூலம் இன்றைய நாளை சிறப்பானதாக ஆக்கிக் கொள்ளலாம். பிரார்த்தனை சிறந்த பலனைத் தரும்.

வேலையில் காணப்படும் சுமை காரணமாக பதட்டமாக உணர்வீர்கள். பணியிடச் சூழல் சிறப்பாக இருக்காது. பணியில் தவறுகள் நேரலாம்.

உங்கள் உணர்ச்சிகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையே மோதல் ஏற்படும்.

சிறிய அளவில் கடன்களை வாங்கி உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். உங்களுக்கென்று சிறிது பணத்தை வைத்துக்கொள்ள இது உதவும்.

கால் வலி அல்லது முதுகு வலி ஏற்படலாம். அது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




உங்கள் நாளை திட்டமிட வேண்டும். இன்று முக்கியமான முடிவுகளை எடுக்க வேண்டாம்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்றுவீர்கள். உங்களின் யதார்த்தமான அணுகுமுறை அதற்கு உதவும். குறிப்பிட நேரத்திற்கு முன்பே பணிகளை முடித்து விடுவீர்கள்.

நீங்கள் இன்று உங்கள் கட்டுப்பாட்டை இழந்து காணப்படுவீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் கருத்து வேறுபாடு ஏற்படும்.

உங்களிடம் குறைந்த அளவு பணம் காணப்படும். இன்று அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

கால் வலி காணப்படலாம். உங்களை வருத்திக் கொள்ளாதீர்கள். முடிந்தவரை ஓய்வெடுங்கள். உடற்பயிற்சிக்கு நேரம் ஒதுக்குங்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 20.02.2024




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். புதிய தொடர்புகள் உருவாகும். அவை உதவிகரமாக இருக்கும். உங்கள் விருப்பங்கள் நிறை வேறும். இன்று முக்கியமான முடிவுகளை எடுக்கலாம்.

இன்று பணியில் திருப்திகரமான நிலை இருக்கும். கடின உழைப்பின் மூலம் வெற்றி கிடைக்கும். நீங்கள் தன்னம்பிக்கையுடன் பணிகளைக் கையாள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும். நீங்கள் உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்குச் சென்றுவருவீர்கள்.

உங்களின் கடின உழைப்பிற்காக ஊக்கத் தொகை அல்லது சலுகைகள் வகையில் பணம் வருவதற்கான வாய்ப்பு உள்ளது. ஆக்கப்பூர்வமான விஷயங்களுக்கு பணத்தை பயன்படுத்துவீர்கள்.




இன்று நம்பிக்கை குறைந்து காணப்படும். உங்கள் பொறுமை சோதனைக்குள்ளாகும். திட்டமிட்டு செயல்களை ஆற்ற வேண்டும்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்காது. நடுநிலையோடு காணப்படும். சக பணியாளர்களிடம் கவனமுடன் பழகவும்.

உங்களிடம் இன்று அனுசரிக்கும் போக்கு காணப்படாது. நீங்கள் இன்று மகிழ்ச்சியை தேடுவீர்கள். உங்கள் துணையிடம் மகிழ்ச்சியாக இருக்க இயலாது. உறவில் மகிழ்ச்சி நிலவ அன்பும் அனுசரணையும் தேவை.

இன்று அதிக பணம் சம்பாதிக்க முடியாது. உங்கள் வரவை விட செலவு அதிகமாக இருக்கும். உங்களிடம் கவலை தரும் வகையில் சில பதட்டங்கள் காணப்படும். மற்றபடி ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நேர்மறை எண்ணத்தோடு இருந்தால் ஆரோக்கியத்தை தக்க வைக்கலாம்.




வெவ்வேறு விஷயங்களில் உங்களிடம் சமநிலையான கருத்து காணப்படும்.உங்களுக்கு நிறைய வாய்ப்புகள் கிடைக்கும்.அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.முக்கியமான முடிவுகள்எடுப்பதற்கு இன்று உகந்த நாள்.

உங்கள் பணிகளை சுமுகமாக செய்து முடிப்பீர்கள். கடினமான பணிகளைக் கூட இன்று எளிதாகவும் விரைவாகவும் செய்து முடிப்பீர்கள்.

இன்று உங்களிடம் இனிமையான உணர்வு காணப்படும். நேர்மறையான எண்ணம் காணப்படும். எனவே உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துங்கள்.




இன்று பதற்றம் காணப்படும். மனதை அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் வைத்துக்கொள்ள வேண்டும்.

நீங்கள் சிறப்பான வேலையை வழங்குவீர்கள். நீங்கள் தன்னிச்சையாக இயங்கி பணியாற்றுவீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. உங்களின் உள்ளத்தை சிறந்த முறையில் வெளிப்படுத்தி உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்யுங்கள்.

உங்களிடம் குறைந்த அளவு பணமே காணப்படும். சேமிப்பதை கடினமாக உணர்வீர்கள். இதனால் குழப்பமான மன நிலையில் காணப்படுவீர்கள்.

வருத்தம் மற்றும் அசௌகரியம் காரணமாக கால்களில் வலி காணப்படும்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDO OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence



S.Thamilan
Group Chairman



CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 548 546

JAFFNA OFFICE
No. 21/1, Karaitivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 698 9949 | Mobile : +94 771 548 539

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park



# காத்தான்குடியில் 735 மாணவர்கள் ஒரே மேடையில் கௌரவிக்கப்பட்டனர்

(எம்.ஏ.ஏ.அக்தார்)

காத்தான்குடியில் கடந்த ஆண்டு இடம்பெற்ற ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் புலமை விழா காத்தான்குடி இஸ்லாமிய வழிகாட்டல் நிலையத்தின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காத்தான்குடி மத்திய கல்லூரி தேசிய பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இதன் போது தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 735 மாணவர்கள் பாராட்டப்பட்டு பதக்கம் அணிவிக்கப்பட்டு பரிசில்கள் , நினைவுச் சின்னம், சான்றிதழ் என்பன வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். அதற்காக உழைத்த ஆசிரியர்கள், அதிபர்களும் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.




காத்தான்குடி இஸ்லாமிய வழிகாட்டல் நிலையத்தின் தலைவரும் தென் கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளருமான அஷ்ஷெய்ஹ் ஏ.எம்.அலியார் ரியாதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தென் கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரும் ஆங்கில மொழித்துறை தலைவருமான கலாநிதி பௌசுல் கரீமா பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

காத்தான்குடி ஜம் இய்யத்துல் உலமா சபை தலைவர் மௌலவி ஹாரூன் றஷாதி உட்பட அதிபர்கள், ஆசிரியர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள், உலமாக்கள், முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# அம்பாறை மாணவருக்கு கற்றல் உபகரணங்கள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

வறுமையால் பாடசாலை கல்வியிலிருந்து இடை விலகலை தவிர்க்கும் வகையில் அம்பாறை பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும், புத்தகப் பைகளும் வழங்கப்பட்டன.



ஸ்ரீ லங்கா இராணுவத்தின் 24 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் ஹட்டன் நஷனல் வங்கியின் அனுசரணையில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை மாணவர்கள் 500 பேருக்குக் கற்றல் உபகரணம் மற்றும் பாடசாலைப் பைகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு அம்பாறை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

ஸ்ரீ லங்கா இராணுவத்தின் 24 ஆவது படைப்பிவின் தளபதி மேஜர் ஜெனரல் விபுல சந்திரசிறி பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.